"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

**மதுரை மாநகராட்சி**

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2011-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 11-ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## <u>அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

**திருக்குறள் :** ஞ தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு ஞ

**பொருள் :** செய்யத்தக்க செயலை ஆராய்ந்து தெரிதலும், அதற்குரிய வழிகளைத் தேர்ந்து செய்தலும், பின் தன் கருத்தை ஐயமின்றித் துணிந்து சொல்ல வல்லவன் அமைச்சன்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன், தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோஇ தெரியாமலோஇ சமூக வேற்றுமையை மனம்இ வாக்குஇ செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன், இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்,

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**<u>1) Cw1/344459/2011</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை 220 நாள்: 28.09.2011ன்படி மதுரை மாநகராட்சி 100 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 99 வார்டுகளுக்கு தேர்தல் நடைபெற்று 99 உறுப்பினர்கள் தோந்தெடுக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு தேர்தல் ஆணையம் கடிதம் எண்.Rc.No.ME-1/9164/2011 நாள்: 09.11.2011 கடிதத்தில்

1. கணக்குக்குழு
2. கல்விக்குழு
3. சுகாதாரக்குழு
4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு
5. நகரமைப்புக்குழு
6. வேலைக்குழு

ஆகிய ஆறு நிலைக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்தபட்சம் 6 ஆகவும், அதிகபட்சமாக 15 ஆகவும் நிர்ணயம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒவ்வொரு நிலைக்குழுக்களிலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் ஒப்பதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.58</u>**

**<u>ஒவ்வொரு குழுவிற்கும் 15 மாமன்ற உறுப்பினர்கள் நிர்ணயம் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது. குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**(ஒம்..) வி.வி.ராஜன்செல்லப்பா**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் : 10.11.2011**
**மதுரை.**

* * * * * * * *

**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**
**மதுரை மாநகராட்சி**

# மாமன்றக் கூட்டம்

**2011-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் நாள் புதன் கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**திருக்குறள் :** ***" அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்***
***பெரும்பயன் இல்லாத சொல் "***

**பொருள் :** அரும் பொருளை ஆயும் அறிவினையுடையார் வாழ்க்கைக்குப் பெரும் பயனைத் தராத சொற்களைச் சொல்லமாட்டார்கள்.

**(சூ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) <u>சி.டபிள்யு.1/ 32292/2011</u>**

2006-ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டு, 24.10.2011 ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்ததை தொடர்ந்து, அரசாணை (நிலை) எண் **220**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: **28.09.2011**–ன்படி மதுரை மாநகராட்சி **100** வார்டுகளாக விரிவாக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்)துறை அரசாணை (நிலை)எண்.124, நாள் :07.09.2011–ன்படி உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்)துறை அரசாணை (நிலை)எண்.142, நாள் :16.09.2011–ன்படி மதுரை மாநகராட்சி மேயர் பதவியிடம் பொது பதவியிடமாக அறிவிக்கப்பட்டது..

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்கள்) துறை அரசாணை (நிலை)எண்.124, நாள் :7.9.2011–ன்படி உள்ளாட்சித் தேர்தல் **–2011 17.10.2011–**ஆம் தேதியன்று நடைபெற்று, **21.10.2011–**ஆம் தேதியன்று தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டது.

அதன்படி, திரு.வி.வி.ராஜன்செல்லப்பா அவர்கள் மேயராக மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டது. அதன்பின்பு **25.10.2011–**ஆம் தேதியன்று மதுரை

மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயராக திரு.வி.வி.ராஜன்செல்லப்பா அவர்களுக்கு, ஆணையாளர் அவர்களால் பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. என்பதை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.59**
**பதிவு செய்யப்பட்டது**

## 2) சி.டபிள்யு.1/ 33102/2011

2006-ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டு, 24.10.2011 ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்ததை தொடர்ந்து, அரசாணை நிலை எண் 220 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **28.9.2011–**ன்படி மதுரை மாநகராட்சி **100** வார்டுகளாக விரிவாக்கப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்கள்) துறை அரசாணை (நிலை) எண் **124**, நாள் : **7.9.2011 –**ன்படி உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதன்படி **17.10.2011–**ஆம் தேதியன்று வாக்குபதிவு நடைபெற்று, **21.10.2011–**ஆம் தேதியன்று தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டன.

செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் ந.க.எண்.9164/2011/ME-1, **20.11.2011–**ஆம் தேதிய கடிதத்தின்படி மாநகராட்சி துணை மேயர் தேர்தல் **29.10.2011–**ம் தேதியன்று தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள் **1995–**ன் விதி **71,91 (3),93–**ன் படியும் மாநகராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள், **2006–**ன் விதி **98–**ன்படியும் துணை மேயர் பதவியிடத்திற்கு மறைமுகத்தேர்தல் தேர்தல் நடத்தும் அலுவலரால் கூட்டப்பட்டு **29.10.2011–**ஆம் தேதியன்று சனிக்கிழமை காலை **9.30 –** மணிக்கு மாநகராட்சி (பெரியார் கூடம்) மாமன்ற கூட்ட அரங்கில் ஆரம்பிக்கப்பட்டது. குறிப்பிட்ட நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கு தேவையான உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். மேற்கண்ட கூட்டத்தில் திரு.ஆர்.கோபாலகிருஷ்ணன், (**4–**வது வார்டு), மாமன்ற உறுப்பினர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்தார். வேட்புமனு பரிசீலிக்கப்பட்டது. வேறு எவரும் வேட்புமனு தாக்கல் செய்யப்படாததால், போட்டியின்றி மரியாதைக்குரிய துணை மேயராக திரு.ஆர்.கோபாலகிருஷ்ணன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற விபரத்தை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.60**
**பதிவு செய்யப்பட்டது**

## 3) சி.டபிள்யு.1/ 32292/2011

2006-ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டு, 24.10.2011-ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்ததை தொடர்ந்து, அரசாணை நிலை எண்.220, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **28.9.2011–**ன்படி மதுரை மாநகராட்சி **100** வார்டுகளாக விரிவாக்கப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்கள்) துறை அரசாணை (நிலை) எண். **124**, நாள் : 7.9.2011 **–**ன்படி உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டது.

மதுரை மாவட்ட அரசிதழ் எண்.**3**, நாள் :14.09.2011-ன்படி இட ஒதுக்கீடு விபரங்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண். | வார்டுகள் எண். | இட ஒதுக்கீடு விபரம் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 35,78 | தாழ்தப்பட்டோர் (பெண்கள்) | 2 |
| 2 | 16,56,60,87 | தாழ்தப்பட்டோர் (பொது) | 4 |
| 3 | 1,3,8,11,14,18,24,27,28,34,36,37,<br>41,42,44,46,53,55,57,63,69,70,74,<br>75, 77,79,81,82,84,96,97,98 | பெண்கள் (பொது) | 32 |
| 4 | - | பழங்குடியினர் (பொது) | Nil |
| 5 | - | பழங்குடியினர் (பெண்கள்) | Nil |
| 6 | 2,4,5,6,7,9,10,12,13,15,17,19,20,21,<br>22,23,25,26,29,30,31,32,33,38,39,40,<br>43,45,47,48,49,50,51,52,54,58,59,61,62,<br>64,65,66,67,68,71,72,73,76,80,83,85,<br>86,88,89,90,91,92,93,94,95,99,100 | பொது | 62 |

மேற்கண்ட இடஒதுக்கீட்டின்படி மதுரை மாநகராட்சியின் 100 வார்டுகளில் வார்டு **15–யை** தவிர ஏனைய 99 வார்டுகளுக்கும் அரசாணை (நிலை) எண்.124, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்)துறை, நாள் :7.9.2011–ன்படி, உள்ளாட்சி தேர்தல்– **2011 ,17.10.2011–**ஆம் தேதியன்று தேர்தல் நடைபெற்று, **21.10.2011–**ஆம் தேதியன்று தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டது. கீழ்கண்ட விபரப்படி 99 மாமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்களின் பெயர் பட்டியல்**

| வார்டு எண், | உறுப்பினர் பெயர் | வார்டு ஒதுக்கீடு விபரம் |
|---|---|---|
| 1 | திருமதி.எம்.கேசவபாண்டியம்மாள் | பெண்கள் (பொது) |
| 2 | திரு. ஆர்.சரவணன் | பொது |
| 3 | திருமதி.ஆர்.சாந்தி | பெண்கள் (பொது) |
| 4 | திரு.ஆர்.கோபாலகிருஷ்ணன் | பொது |
| 5 | திரு.என்.தங்கப்பாண்டியன் | பொது |
| 6 | திரு.ஏ.ராஜீவ்காந்தி | பொது |
| 7 | திரு.எஸ்.முத்து ராஜா | பொது |
| 8 | திருமதி.பி.பழனியம்மாள் | பெண்கள் (பொது) |
| 9 | திரு.ம.தாஸ் | பொது |
| 10 | திரு.ஆர்.அருண்குமார் | பொது |
| 11 | திருமதி.டி.முருகேஸ்வரி | பெண்கள் (பொது) |
| 12 | திரு.பி.ஜெயராமன் | பொது |
| 13 | திருமதி.டி.பாண்டியம்மாள் | பொது |
| 14 | திருமதி.பி.அனுராதா | பெண்கள் (பொது) |
| 15 | காலியிடம் | பொது |
| 16 | திரு.எஸ்.பாஸ்கர் | தாழ்தப்பட்டோர் (பொது) |
| 17 | திரு.எம்.ஷாஹிர்ஷா | பொது |
| 18 | செல்வி.இரா.லெட்சுமி | பெண்கள் (பொது) |
| 19 | திரு.எஸ்.முருகேசன் | பொது |
| 20 | திரு.க.ராஜபாண்டியன் | பொது |
| 21 | திரு.க.முத்துக்கருப்பன் | பொது |
| 22 | திரு.எஸ்.ராஜேந்திரன் | பொது |
| 23 | திரு.கு.திரவியம் | பொது |
| 24 | திருமதி.நா.சண்முகப்பிரியா | பெண்கள் (பொது) |
| 25 | திரு.எஸ்.ஜீவானந்தம் | பொது |
| 26 | திரு.எஸ்.ஜெங்கிஸ்கான் | பொது |
| 27 | திருமதி.அ.மாரி | பெண்கள் (பொது) |
| 28 | திருமதி.ஆர்.முத்துப்பொண்ணு | பெண்கள் (பொது) |
| 29 | திரு.மு.மோகன் | பொது |
| 30 | திரு.ஏ.ஜெயக்குமார் | பொது |
| 31 | திரு.எஸ்.கே.சுசீந்திரன் | பொது |
| 32 | திரு.ஏ.எஸ்.ராஜன் | பொது |
| 33 | திரு.என்.முருகன் | பொது |
| 34 | திருமதி. பி.ராணி | பெண்கள் (பொது) |
| 35 | திருமதி.எம்.மாரியம்மாள் | தாழ்தப்பட்டோர் (பெண்) |
| 36 | திருமதி.டி.ஆனந்தவள்ளி | பெண்கள் (பொது) |
| 37 | திருமதி.கே.தமிழச்செல்வி | பெண்கள் (பொது) |
| 38 | திரு.மா.சௌந்திரபாண்டியன் | பொது |
| 39 | திரு.பாலு.ஜி.கே(எ)பாலசுப்பிரமணியன் | பொது |
| 40 | திரு.என்.ஆறுமுகம் | பொது |
| 41 | திருமதி.பெ.இந்திராணி | பெண்கள் (பொது) |
| 42 | திருமதி.ஏ.சுகந்தி | பெண்கள் (பொது) |
| 43 | திரு.டி.ராமன் | பொது |
| 44 | திருமதி.ம.ராஜலெட்சுமி | பெண்கள் (பொது) |
| 45 | திரு.ஐ.அபுதாஹிர் | பொது |

| | | |
|---|---|---|
| 46 | திருமதி.சி.சாலினிதேவி | பெண்கள் (பொது) |
| 47 | திரு.கே.ஜெயவேல் | பொது |
| 48 | திருமதி.மு.பூமயில் | பொது |
| 49 | திரு.பி.சசிக்குமார் | பொது |
| 50 | திரு.உ.நூர்முகமது | பொது |
| 51 | திரு.கி.விஜயராகவன் | பொது |
| 52 | திரு.ஷ.ராஜலிங்கம் | பொது |
| 53 | திருமதி.தங்கம் தெட்சிணாமூர்த்தி | பெண்கள் (பொது) |
| 54 | திரு.கு.ப.சரவணன் | பொது |
| 55 | திருமதி.காமாட்சி முத்துக்குமார் | பெண்கள் (பொது) |
| 56 | திரு.பெ.சுப்பிரமணியன் | தாழ்தப்பட்டோர் (பொது) |
| 57 | திருமதி.ஜி.காதர்அம்மாள் | பெண்கள் (பொது) |
| 58 | திரு.நா.ராமசுப்பிரமணியன் | பொது |
| 59 | திரு.கே.சக்திவேல் | பொது |
| 60 | திரு.எஸ்.வீரக்குமார் | தாழ்தப்பட்டோர் (பொது) |
| 61 | திரு.போ.முத்தையா | பொது |
| 62 | திரு.பி.காசிராமன் | பொது |
| 63 | திருமதி.எம்.செல்லம் | பெண்கள் (பொது) |
| 64 | திரு.எஸ்.டி.ஜெயபாலன் | பொது |
| 65 | திரு.கே.ஜெயக்குமார் | பொது |
| 66 | திரு.கே.தங்கவேல் | பொது |
| 67 | திரு.இ.முபாரக் மந்திரி | பொது |
| 68 | திரு.எஸ்.கே.ஜெகநாதன் | பொது |
| 69 | திருமதி.பி.விஜயலெட்சுமி | பெண்கள் (பொது) |
| 70 | திருமதி.கே.சண்முகவள்ளி | பெண்கள் (பொது) |
| 71 | திரு.மு.ராஜபாண்டியன் | பொது |
| 72 | திரு.ப.குமார் | பொது |
| 73 | திரு.எஸ்.எஸ்.சரவணன் | பொது |
| 74 | திருமதி.ஜெ.நா.ஜெயகீதா | பெண்கள் (பொது) |
| 75 | திருமதி.கே.முனியம்மாள் | பெண்கள் (பொது) |
| 76 | திரு.பெ.சாலைமுத்து | பொது |
| 77 | திருமதி.ஆர்.ஜெயலெட்சுமி | பெண்கள் (பொது) |
| 78 | திருமதி.டி.சித்திரைஜோதி | தாழ்தப்பட்டோர் (பெண்) |
| 79 | திருமதி.எம்.குமுதா | பெண்கள் (பொது) |
| 80 | திருமதி.ப.கண்ணகி | பொது |
| 81 | திருமதி.பி.முத்துமீனா | பெண்கள் (பொது) |
| 82 | திருமதி.பி.கலாவதி | பெண்கள் (பொது) |
| 83 | திரு.ஏ.மாணிக்கம் | பொது |
| 84 | திருமதி.கோ.ராஜேஸ்வரி கோவிந்தன் | பெண்கள் (பொது) |
| 85 | திரு.எஸ்.குமார் | பொது |
| 86 | திரு.எம்.சாதிக்பாட்சா(எ) நன்னா | பொது |
| 87 | திரு.பி.கருப்பையா | தாழ்தப்பட்டோர் (பொது) |
| 88 | திரு.எஸ்.வீரணன் | பொது |
| 89 | திரு.செ.பூமி பாலகன் | பொது |
| 90 | திரு.கே.போஸ் | பொது |
| 91 | திரு.எம்.கண்ணன் | பொது |
| 92 | திரு.கே.முருகேசன் | பொது |
| 93 | திரு.எஸ்.இராஜா சீனிவாசன் | பொது |
| 94 | திரு.எஸ்.முனியாண்டி | பொது |
| 95 | திரு.இரா.முத்துக்குமார் | பொது |
| 96 | திருமதி.ஏ.ஹமீதா பேகம் | பெண்கள் (பொது) |
| 97 | திருமதி.பி.நாகலெட்சுமி | பெண்கள் (பொது) |
| 98 | திருமதி.பி.சந்தியா | பெண்கள் (பொது) |
| 99 | திரு.எம்.எல்ராஜ் | பொது |
| 100 | திரு.டி.சின்னமுருகன் | பொது |

தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்களுக்கு **25.10.2011 –**ஆம் தேதியன்று ஆணையாளர் அவர்களால் பதவி பிரமானம் செய்து வைக்கப்பட்டது என்ற விபரத்தினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.61**
**பதிவு செய்யப்பட்டது**

## 4) சிடபிள்யு1/34350/2011

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் எண்.106/2011/TNSEC/ME-1, நாள் :03.11.2011-ஆம் தேதிய சட்டபூர்வ ஆணையின்படியும், செயலாளர், தமிழ்நாடு தேர்தல் ஆணையம் தொலை அச்சுக்கடிதம் Rc.No.ME1/9164/2011/ நாள்:03.11.2011–ஆம் தேதிய கடிதத்தின்படியும் மதுரை மாநகராட்சியின் வார்டுகள் குழுத்தலைவர் (நான்கு மண்டலம்) பதவிகளுக்கான தேர்தல் கூட்டம் அறிவிக்கப்பட்டவாறு தேர்தல் பணிகள் 20.11.2011–ஆம் தேதியன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மதுரை மாநகராட்சி (பெரியார் கூடம்) மாமன்ற கூட்ட அரங்கில் ஆரம்பிக்கப்பட்டது. குறிப்பிட்ட நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கு தேவையான உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். மேற்கண்ட தேர்தல்கள் ஆணையாளரால் தலைமை வகித்து நடத்தப்பட்டது. நான்கு வார்டுகள்குழுத் தலைவர் (மண்டலத் தலைவர்கள்) தேர்தலில் கீழ்கண்ட விபரப்படி உறுப்பினர்கள் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

| | |
|---|---|
| **1) வார்டுகள்குழுத் தலைவர் (மண்டலம்–1)** | **– திரு.கே.ராஜபாண்டியன், உறுப்பினர் (வார்டு–20 )** |
| **2) வார்டுகள்குழுத் தலைவர் (மண்டலம்–2)** | **– திரு.கே.ஜெயவேல், உறுப்பினர் (வார்டு–47)** |
| **3) வார்டுகள்குழுத் தலைவர் (மண்டலம்–3)** | **– திரு. எம்.இராஜபாண்டியன், உறுப்பினர் (வார்டு–71)** |
| **4) வார்டுகள்குழுத் தலைவர் (மண்டலம்–4)** | **– திரு.பெ.சாலைமுத்து, உறுப்பினர் (வார்டு–76 )** |

மேற்கண்ட உறுப்பினர்களின் வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வேறு எவரும் வேட்புமனுகள் தாக்கல் செய்யவில்லை. எனவே மேற்கண்ட நான்கு வார்டுகள் குழுத் தலைவர் (மண்டலத் தலைவர்கள்) பதவிக்கு, வார்டுகள்குழுத் தலைவர்களாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது என்ற விபரத்தினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.62**
**பதிவு செய்யப்பட்டது**

## 5) சி.டபிள்யு.1/34350/2011

தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின் நிலை ஆணை எண்.106/2011/TNSEC/ME-1, நாள்:03.11.2011–ஆம் தேதிய சட்டபூர்வ ஆணையின்படியும், செயலாளர் தமிழ்நாடு தேர்தல் ஆணையம் தொலை அச்சுக்கடிதம் Rc.No.ME1/9164/2011, நாள் **3.11.20011–**ம் தேதிய கடிதத்தின்படியும், மதுரை மாநகராட்சியின் மாமன்ற நியமனக்குழு உறுப்பினர் தேர்தல் கூட்டம் 21.11.2011–ஆம் தேதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெற்றது. அறிவிக்கப்பட்டவாறு தேர்தல் பணிகள் மேற்கண்ட நாளில் மதுரை மாநகராட்சி மாமன்றக் கூட்ட அரங்கில் குறிப்பிட்ட நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கு தேவையான உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மாமன்ற நியமனக்குழு உறுப்பினர் தேர்தலில் **திரு.எஸ்.குமார்,** மாமன்ற உறுப்பினர் (வார்டு எண்.**85)** மட்டும் வேட்புமனு தாக்கல் செய்தார். வேட்புமனு பரிசீலனை செய்யப்பட்டது. வேறு யாரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை.

எனவே **திரு.எஸ்.குமார்,** மாமன்ற உறுப்பினர் (வார்டு எண்.**85)** மாமன்ற நியமனக்குழு உறுப்பினர் பதவிக்கு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது. மேற்கண்ட விபரத்தினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.63**
**பதிவு செய்யப்பட்டது**

**6) <u>சி.டபிள்யு.1/ 34459/ 2011</u>**

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் நிலை ஆணை எண்.S.O.No.115/2011/TNSEC/ ME-1, நாள்:08.11.2011–ஆம் தேதிய சட்டப்பூர்வ ஆணையின்படியும் Rc.No.ME1/9164/2011, நாள்:**3.11.2011**–ம் தேதிய கடிதத்தின்படியும் மதுரை மாநகராட்சியின் ஆறு நிலைக்குழு உறுப்பினர்கள் பதவிக்கான தேர்தல் கூட்டம் அறிவிக்கப்பட்டவாறு தேர்தல் பணிகள் **20.11.2011**–ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் **2.30**–மணிக்கு மதுரை மாநகராட்சி (பெரியார் கூடம்) மாமன்றக் கூட்ட அரங்கில் தேர்தல் நடைபெற்றது. கூட்டம் நடத்துவதற்கு தேவையான மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மேற்கண்ட ஆறு நிலைக்குழு உறுப்பினர்கள் தேர்தலுக்கு கீழ்கண்ட விபரப்படி மாமன்ற உறுப்பினர்கள் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

**<u>1. கணக்குக் குழு உறுப்பினர்கள்</u>**

| வ எண். | மாமன்ற உறுப்பினர் பெயர் | வார்டு எண். |
|---|---|---|
| 1. | திருமதி.எம்.கேசவபாண்டியம்மாள் | 1 |
| 2. | திரு.ஆர்.சரவணன் | 2 |
| 3. | திரு.ஏ.ராஜீவ்காந்தி | 6 |
| 4. | திருமதி.பி.பழனியம்மாள் | 8 |
| 5. | திரு.ம.தாஸ் | 9 |
| 6. | திருமதி.டி.முருகேஸ்வரி | 11 |
| 7. | திரு.எஸ்.பாஸ்கர் | 16 |
| 8. | திரு.கு.திரவியம் | 23 |
| 9. | திருமதி.ஆ.மாரி | 27 |
| 10. | திருமதி.பி.ராணி | 34 |
| 11. | திருமதி.டி.ஆனந்தவள்ளி | 36 |
| 12. | திரு.என்.ஆறுமுகம் | 40 |
| 13. | திருமதி.பெ.இந்திராணி | 41 |
| 14. | திருமதி.காமாட்சி | 55 |
| 15. | திரு.செபூமி பாலகன் | 89 |

**<u>2. கல்விக்குழு உறுப்பினர்கள்</u>**

| வ. எண் | மாமன்ற உறுப்பினர் பெயர் | வார்டு எண். |
|---|---|---|
| 1. | திருமதி.டி.பாண்டியம்மாள் | 13 |
| 2. | செல்வி.இரா.லெட்சுமி | 18 |
| 3. | திரு.மு.மோகன் | 29 |
| 4. | திருமதி.ஏ.சுகந்தி | 42 |
| 5. | திரு.ஐ.அபுதாஹிர் | 45 |
| 6. | திருமதி.சி.சாலினி தேவி | 46 |
| 7. | திரு.உ.நூர்முகம்மது | 50 |
| 8. | திருமதி.காதர் அம்மாள் | 57 |
| 9. | திரு.நா.ராமசுப்பிரமணியன் | 58 |
| 10. | திரு.பி.காசிராமன் | 62 |
| 11. | திரு.கே.தங்கவேல் | 66 |
| 12. | திரு.எஸ்.கே.ஜெகநாதன் | 68 |
| 13. | திருமதி.ஜெ.நா.ஜெயகீதா | 74 |
| 14. | திருமதி.பி.முத்து மீனா | 81 |
| 15. | திருமதி.ஹமீதா பேகம் | 96 |

**<u>3. சுகாதாரக் குழு உறுப்பினர்கள்</u>**

| வ. எண் | மாமன்ற உறுப்பினர் பெயர் | வார்டு எண். |
|---|---|---|
| 1. | திரு.என்.தங்கப்பாண்டியன் | 5 |
| 2. | திரு.பி.ஜெயராமன் | 12 |
| 3. | திரு.ஏ.எஸ்.ராஜன் | 32 |
| 4. | திருமதி.எம்.மாரியம்மாள் | 35 |
| 5. | திருமதி.மா.ராஜலெட்சுமி | 44 |
| 6. | திரு.கே.சக்திவேல் | 59 |
| 7. | திருமதி.எம்.செல்லம் | 63 |
| 8. | திருமதி.ஜெ.முனியம்மாள் | 75 |
| 9. | திருமதி.டி.சித்திரைஜோதி | 78 |
| 10. | திருமதி.மு.பூமயில் | 82 |
| 11. | திரு.பி.கருப்பையா | 87 |
| 12. | திரு.கே.போஸ் | 90 |
| 13. | திரு.எஸ்.முனியாண்டி | 94 |
| 14. | திருமதி.பி.நாகலெட்சுமி | 97 |
| 15. | திரு.டி.சின்ன முருகன் | 100 |

**<u>4. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு உறுப்பினர்கள்</u>**

| வ. எண் | மாமன்ற உறுப்பினர் பெயர் | வார்டு எண். |
|---|---|---|
| 1. | திருமதி.சாந்தி ராமநாதன் | 3 |
| 2. | திருமதி.டி.முருகேஸ்வரி | 11 |
| 3. | திரு.எஸ்.ராஜேந்திரன் | 22 |
| 4. | திரு.கு.திரவியம் | 23 |
| 5. | திரு.எஸ்.கே.சுசீந்திரன் | 31 |
| 6. | திருமதி.பெ.இந்திராணி | 41 |
| 7. | திரு.ஐ.அபுதாஹிர் | 45 |
| 8. | திருமதி.பி.கலாவதி | 48 |
| 9. | திரு.கி.விஜயராகவன் | 51 |
| 10. | திருமதி.காமாட்சி | 55 |
| 11. | திரு.பெ.சுப்பிரமணியன் | 56 |
| 12. | திரு.எஸ்.டி.ஜெயபாலன் | 64 |
| 13. | திரு.பா.குமார் | 72 |
| 14. | திரு.எஸ்.ராஜா சீனிவாசன் | 93 |
| 15. | திருமதி.பி.சந்தியா | 98 |

**5. நகரமைப்புக் குழு உறுப்பினர்கள்**

| வ.எண் | மாமன்ற உறுப்பினர் பெயர் | வார்டு எண். |
|---|---|---|
| 1. | திரு.ஏ.ராஜீவ்காந்தி | 6 |
| 2. | திரு.எஸ்.முத்து ராஜா | 7 |
| 3. | திருமதி.பி.அனுராதா | 14 |
| 4. | திரு.எஸ்.பாஸ்கர் | 16 |
| 5. | திருமதி.நா.சண்முகபிரியா | 24 |
| 6. | திருமதி ஆர்.முத்து பொண்ணு | 28 |
| 7. | திரு.மா.சௌந்திரபாண்டியன் | 38 |
| 8. | திரு.என்.ஆறுமுகம் | 40 |
| 9. | திரு.டி.ராஜலிங்கம் | 52 |
| 10. | திரு.கு.ப.சரவணன் | 54 |
| 11. | திரு.கே.ஜெயக்குமார் | 65 |
| 12. | திருமதி.எம்.குமுதா | 79 |
| 13. | திருமதி.பி.முத்து மீனா | 81 |
| 14. | திரு.எஸ்.வீரணன் | 88 |
| 15. | திரு.செ.பூமிபாலகன் | 89 |

**6. வேலைக் குழு உறுப்பினர்கள்**

| வ.எண் | மாமன்ற உறுப்பினர் பெயர் | வார்டு எண். |
|---|---|---|
| 1. | திருமதி.கேசவபாண்டியம்மாள் | 1 |
| 2. | திரு.ம.தாஸ் | 9 |
| 3. | திரு.பி.ஜெயராமன் | 12 |
| 4. | செல்வி.இரா.லெட்சுமி | 18 |
| 5. | திரு.எஸ்.முருகேசன் | 19 |
| 6. | திரு.ஏ.ஜெயக்குமார் | 30 |
| 7. | திருமதி.கே.தமிழ்செல்வி | 37 |
| 8. | திரு.பாலுஜி.கே.(எ)பாலசுப்பிரமணியன் | 39 |
| 9. | திரு.டி.ராமன் | 43 |
| 10. | திரு.எஸ்.எஸ்.சரவணன் | 73 |
| 11. | திருமதி.ஆர்.ஜெயலெட்சுமி | 77 |
| 12. | திருமதி.பா.கண்ணகி | 80 |
| 13. | திரு.கே.முருகேசன் | 92 |
| 14. | திரு.ரா.முத்துகுமார் | 95 |
| 15. | திருமதி.பி.நாகலெட்சுமி | 97 |

மனுக்கள் வாபஸ் பெறும் நேரம் முடிந்தபின், மேற்கண்ட ஆறு நிலைக்குழுக்களுக்கும் 15 உறுப்பினர்கள் மேற்கொண்டு நிலைக்குழுக்கள் முறையே கணக்குக் குழு, கல்விக்குழு, சுகாதாரக்குழு, வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு, நகரமைப்புக்குழு, மற்றும் வேலைக்குழு ஆகிய ஆறு நிலைக்குழுக்களுக்கும் தேர்தல் நடைபெற்றது. இதில் ஒவ்வொரு குழுவிற்கும் **15** உறுப்பினர்கள் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்துள்ளதால் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. என்ற விபரத்தினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.64**
**பதிவு செய்யப்பட்டது**

## 7) சி.டபிள்யு.1/ 34459/ 2011

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் நிலை ஆணை எண்.S.O.No.115/2011/ TNSEC/ME-1, நாள்:08.11.2011–ஆம் தேதிய சட்டப்பூர்வ ஆணையின்படியும் Rc.No.ME1/9164/2011, நாள் **3.11.2011–**ம் தேதிய கடிதத்தின்படியும், மதுரை மாநகராட்சியின் ஆறு நிலைக்குழு தலைவர்கள் பதவிக்கான தேர்தல் கூட்டம் அறிவிக்கப்பட்டவாறு தேர்தல் பணிகள் **21.11.2011–**ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் **2.30–**மணிக்கு மதுரை மாநகராட்சி (பெரியார் கூடம்) மாமன்றக் கூட்ட அரங்கில் தேர்தல் நடைபெற்றது . கூட்டம் நடத்துவதற்கு தேவையான மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மேற்கண்ட ஆறு நிலைக்குழு தலைவர்கள் தேர்தலுக்கு கீழ்கண்ட விபரப்படி தேர்தெடுக்கப்பட்ட நிலைக்குழு உறுப்பினர்கள் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

| வ.எண் | ஆறு நிலைக்குழுக்கள் | மாமன்ற உறுப்பினர் பெயர் | வார்டு எண். |
|---|---|---|---|
| 1. | கணக்குக் குழு | திரு.ஆர்.சரவணன் | 2 |
| 2. | கல்விக் குழு | திருமதி.ஏ.சுகந்தி | 42 |
| 3. | சுகாதாரக் குழு | திரு.எஸ்.முனியாண்டி | 94 |
| 4. | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு | திரு.எஸ்.டி.ஜெயபாலன் | 64 |
| 5. | நகரமைப்புக் குழு | திரு.ஷ.ராஜலிங்கம் | 52 |
| 6. | வேலைக்குழு | திருமதி.பா.கண்ணகி | 80 |

மனுக்கள் வாபஸ் பெறும் நேரம் முடிந்தபின், மேற்கண்ட ஆறு நிலைக்குழுக்களுக்கும் 6 தலைவர்கள் மேற்கொண்டு நிலைக்குழுக்கள் முறையே கணக்குக் குழு, கல்விக்குழு, சுகாதாரக்குழு, வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு, நகரமைப்புக்குழு, மற்றும் வேலைக்குழு ஆகிய ஆறு நிலைக்குழுக்களுக்கும் தேர்தல் நடைபெற்றது. இதில் ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு நிலைக்குழு உறுப்பினர் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்துள்ளதால் போட்டியின்றி நிலைக்குழு தலைவர்கள் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது என்ற விபரத்தினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.65**
**பதிவு செய்யப்பட்டது**

**8) <u>ம.நி.1/5027/2010</u>**

மதுரை மாநகராட்சியில் அயற்பணியின்கீழ் பணிபுரிந்து வரும் திரு.வி.சுப்பிரமணியம், நகர்நல அலுவலர் அவர்களின் அயற்பணிக் காலத்தினை 25.10.2010 முதல் 24.10.2011 வரை, ஏற்கனவே நிர்ணயிக்கப் பெற்ற அயற்பணியின் கீழ் தற்போது 25.10.2011 முதல் 30.06.2012 வரை நீட்டிப்பு செய்து வரப்பெற்றுள்ள மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, (L-2) பிரிவு அரசாணை எண்.1185, நாள் :**01.11.2011–**ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** திரு.வி.சுப்பிரமணியம், நகர்நல அலுவலர் அயற்பணியின் கீழ் ஏற்கனவே பணிபுரிந்து வருகிறார்.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.66</u>**

**<u>பதிவு செய்யப்பட்டது</u>**

**9) <u>ம.பொ. 8 / 01525 / 07</u>**

கோவில் மாநகரமாகிய மதுரை மாநகரில் அமைந்துள்ள அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோவில் உள்ள பெற்றாமரைக் குளத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி, நிரந்தரமாக தண்ணீரினை தேக்கி வைப்பதற்கு உரிய ஆய்வுகளை நடத்தி திருக்கோவில் நிர்வாகம் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்தப் பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கும் வகையில் மாநகராட்சி பொற்றாமரைக் குளத்தில் தண்ணீரினை நிரப்புவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.67</u>**

**<u>அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவில் பொற்றாமரை குளத்தில் நிரந்தரமாக தண்ணீர் தேக்கி வைப்பதற்கு வேண்டிய உதவிகள் செய்ய மாமன்றம் தீர்மனிக்கிறது</u>**

**10) <u>ம.நி. 2 / 34951 /2011</u>**

மாநகராட்சி பணிவிதிகள் அரசாணை நிலை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் :12.05.98–ன்படி இம்மாநகராட்சிக்கு ஒரு வாகனத்திற்கு ஒரு பணியிடம் என்ற அடிப்படையில் அன்றைய நாளில் ஓடிக் கொண்டிருந்த **91** வாகனங்களுக்கு (கனரகம் மற்றும் இலகுரக வாகனங்கள் சேர்த்து) **91** வாகன ஓட்டுநர் பணியிடம் அனுமதிக்கப்பட்டது. தற்போது, மதுரை மாநகராட்சியில் கனரக வாகனங்கள் **170 –**ம், இலகுரக வாகனங்கள் **96–**ம் உள்ளன.

**2)** மதுரை மாநகராட்சியில் தற்போது நிரந்தரப் பணியாளர்களாக உள்ள மொத்த வாகன ஓட்டுநர்கள் எண்ணிக்கை **70** ஆகும். ஒதுக்கப்பட்ட பணியிடத்திலேயே **21** காலியிடங்கள் உள்ளன. தவிர ஒப்பந்த அடிப்படையில், **151** (96+55) வாகன ஓட்டுநர்கள் மாநகராட்சி பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள்.

**3)** மேற்கண்ட சூழலில், தற்போது வாகன ஓட்டுநர்களின் எண்ணிக்கை நிரந்தர ஓட்டுநர்கள் **– 70,** ஒப்பந்த அடிப்படை ஓட்டுநர்கள் 96+55 (**55** ஓட்டுநர்கள் ஆட்டோ மட்டும்)

**4)** தற்போது, மதுரை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதனால் கனரக வாகன ஓட்டுநர்களின் தேவை, திடக்கழிவு மேலாண்மை, தெருவிளக்கு பராமரிப்பு, பாதாள சாக்கடை பராமரிப்பு, குடிநீர் விநியோகம் உள்ளிட்ட பணிகளுக்கு அதிகரித்துள்ளது. மேலும், இதனை எதிர்கொள்ள, ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட வாகன ஓட்டுநர்களின் பணியும், திருப்திகரமாக இல்லை. ஒப்பந்தக்காரர்கள் ஓட்டுநர்களுக்கு முறையாக ஊதியம் வழங்காததாலும், பணிப்பாதுகாப்பு இல்லாத காரணத்தாலும், ஒப்பந்த அடிப்படை வாகன ஓட்டுநர்கள் பணியில் போதிய ஆர்வம் இல்லாமல் உள்ளனர். இதனால் மாநகராட்சி பணி பாதிக்கப்படும் சூழல் எழுந்துள்ளது.

**5)** எனவே, மேற்கண்ட சூழலில், மாநகராட்சி பணியினை, இன்னும் திறம்பட மேற்கொள்ள, வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் **50** வாகன ஓட்டுநர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயித்த தினக்கூலி அடிப்படையில் பணி நியமனம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**(குறிப்பு :** உத்தேச செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ.**40,15,000/-)**

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.68</u>**

**<u>மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் 50 வாகன ஓட்டுனர்களை பணி நியமனம் செய்ய மாமன்றம் தீர்மனிக்கிறது</u>**

**11) Jn. S. 1/04454/10**

மதுரை மாநகராட்சியில் தற்போது இயங்கி வரும் மத்திய காய்கனி அங்காடியை விவசாயிகள், விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் இல்லாத நிலை உள்ளது. எனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாட்டுத்தாவணி பகுதியில் புதிய காய்கனி அங்காடி அமைப்பதற்கு 1994–ம் ஆண்டு அறிவித்த அதே இடத்தில் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் மூலம் மாட்டுத்தாவணி பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான 26.74 ஏக்கர் காலி இடத்தில் புதிய காய்கனி அங்காடியை கட்டுவதற்கு மேற்படி இடத்தை குத்தகை அடிப்படையில் வழங்க அரசின் அனுமதி பெறுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.69**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1994–ம் ஆண்டு அறிவித்த அதே இடத்தில் தமிழ்நாடு மாநில விற்பனை வாரியத்தின் மூலம் புதிய காய்கனி அங்காடியை கட்டுவதற்கு மேற்படி இடத்தை குத்தகை அடிப்படையில் வழங்க அரசின் அனுமதி பெறுவதற்கு மாமன்றம் தீர்மானிக்கிறது**

**12) ந.பொ. 1 / 19479 / 08**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வாகன நிறுத்துமிடங்கள் இல்லாத காரணத்தினால் வாகனங்கள் சாலையோரமாக நிறுத்தப்பட்டு வருவதால் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் மிகவும் இடையூறாக இருப்பதோடு விபத்துகளும் ஏற்பட்டு வருகின்றது. மேலும் வாகனங்கள் சாலையோர நிறுத்தப்படுவதால் சாலையின் அகலம் குறைந்து பாதசாரிகள் நடைபாதை மேடையில் நடந்து செல்லாமல் சாலையில் செல்ல இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் நகரின் மையப் பகுதியில் வாகனங்கள் நிறுத்துவதற்கு மாநகராட்சிக்கு சொந்தமான பகுதிகளில் போதுமான இட வசதி இல்லாத காரணத்தினால் தானியங்கி அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம் கீழ்க்கண்ட இடங்களில் அமைக்கலாம்.

1) ஜான்சி ராணி பூங்கா அருகில்
2) பெரியார் பேருந்து நிலையம் அருகில் (பழைய திருவள்ளுவர் பேருந்து நிலையம்)
3) மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்து பேருந்து நிலையம் அருகில்

தற்போது மாநகராட்சியின் நிதி நிலைமையினைக் கருத்தில் கொண்டு பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்பு (Public Private Partnership Mode) மூலம் மேற்படி தானியங்கி அடுக்குமாடி வாகன நிறுத்துமிடங்களை அமைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.70**

**பொருளில் குறிப்பிட்ட 3 இடத்தில் பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்பு மூலம் தானியங்கி அடுக்குமாடி வாகன நிறுத்தும் இடங்களை அமைக்க மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**13) ந.பொ. 1 / 19479 / 08**

மதுரை மாநகராட்சிப் பகுதியில் தற்போது குழந்தைகளின் பொழுதுபோக்கிற்கென இராஜாஜி சிறுவர் பூங்கா மட்டுமே செயல்பட்டு வருகின்றது. பிற மாநகர்களில் குழந்தைகளின் அறிவுத்திறனை வளர்க்கக் கூடிய பொழுதுபோக்கிற்கென கணினி விளையாட்டுகள் மற்றும் 4 D திரையரங்குகள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இதன் மூலமாக அம்மாநகராட்சிகளுக்கு வருவாய் கிடைக்கப் பெற்று வருகின்றது. அதை போன்று மதுரை மாநகரப் பகுதிகளுக்கான குழந்தைகளுக்கு இராஜாஜி சிறுவர் பூங்கா அருகிலுள்ள மாநரகாட்சிக்கு சொந்தமான இடத்தில் தரை தளத்தில் வாகன நிறுத்தத்திற்கு தேவையான வசதிகளையும், முதல் தளத்தில் கணினி விளையாட்டு அரங்கம் இரண்டாம் தளத்தில் 4 D திரையங்கம் மூன்றாம் தளத்தில் பன்னாட்டு உணவகம் மற்றும் நான்காம் தளத்தில் குழந்தைகளுக்கான விளையாட்டு பொருட்கள் விற்பனையகம் அமைப்பதன் மூலம் குழந்தைகளுக்கான உயர்தொழில்நுட்ப (High tech) பொழுதுபோக்கு மற்றும் அறிவுத் திறனை பெருக்குவதற்கு ஏதுவாக இருக்கும்.

தற்போது மாநகராட்சியின் நிதி நிலைமையினைக் கருத்தில் கொண்டு பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்பு (Public Private Partnership Mode) மூலம் மேற்படி சிறுவர் விளையாட்டு அரங்கம் அமைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.71**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**14) ந.பொ. 1 / 19479 / 08**

மதுரை மாநகராட்சியின் ஏற்கனேவ உள்ள 72 வார்டுகளுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளின் 28 வார்டுகளையும் சேர்த்து ஆக மொத்தம் 100 வார்டுகளின் அத்தியாவசியப் பணிகளான திடக்கழிவு மேலாண்மை, பாதாள சாக்கடை, குடிநீர், சாலை மற்றும் தெருவிளக்கு போன்ற பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஏற்கனவே மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் பணியாளர்களைக்

கொண்டு மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே மேற்படி புதிதாக இணைக்கப்பட்டுள்ள 28 வார்டுகளில் அத்தியவசியப் பணிகளை மேற்கொள்வதற்கு கூடுதலாக கீழ்க்கண்ட பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

| வ. எண் | மண்டலத்தின் பெயர் | குடிநீர் பணி | சாலை பணி | திறந்தவெளி வாய்க்கால் பணி | திடக்கழிவு மேலாண்மை பணி | தெருவிளக்கு பணி | பாதாள சாக்கடை பணி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | மண்டலம் 1 | 23 | 20 | 30 | 55 | 24 | 5 | 157 |
| 2. | மண்டலம் 2 | 31 | 22 | 28 | 97 | 20 | 8 | 206 |
| 3. | மண்டலம் 3 | 36 | 24 | 36 | 60 | 18 | -- | 174 |
| 4. | மண்டலம் 4 | 32 | 18 | 18 | 30 | 12 | 18 | 128 |
| | **மொத்தம்** | **122** | **84** | **112** | **242** | **74** | **31** | **665** |

மேற்படி பணியாளர்களை மதுரை மாநகராட்சியின் நிதி நிலைமையினைக் கருத்தில் கொண்டு நிரந்தரமாக பணி நியமனம் செய்ய இயலாத நிலை உள்ளதால் ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது தினக்கூலி அடிப்படையிலோ பணியாளர்களை பணியமர்த்தி அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.72**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**15) மு.வ1/39580/07**

விரிவாக்கம் செய்யப்படாத மதுரை மாநகராட்சியில் 1.4.2008 ஆம் தேதி முதல் வரி சீராய்வு செய்யப்பட்ட வரிவிதிப்பு அமல்படுத்தப்பட்டது. இந்த வரிச் சீராய்வு மதுரை மாநகராட்சி மாமன்றத்தின் தீர்மானம் எண். 338 நாள் : 28.03.08-படி ஒப்புதல் பெறப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானமும் அரசு ஆணை எண். 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் : 12.11.2007, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலரின் 1.2.2008 நாளிட்ட கடித எண். 38279/ தேர்தல் / 2006-2 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரின் அலுவலகச் சுற்றறிக்கை எண். 63012/2007/ஆர்1, நாள் :9.1.2008 ஆகியவற்றில் கூறப்பட்டிருந்த வழிகாட்டுதல்களின்படி நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தின்படி, மதுரை மாநகராட்சியில் பல்வேறு இனங்களில் 1.4.2007 நாளன்று என்ன வரி விதிக்கப்பட்டதோ அந்தந்த இனங்களில் 1.4.2008 முதல் கீழ்கண்டவாறு சதவீத அடிப்படையில் வரி கூடுதலாக உயர்த்தப்பட்டு 1.4.2008 முதல் உயர்த்தப்பட்ட வரி அமலுக்கு கொண்டு வரப்பட்டது.

2011 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற வழக்கமான தேர்தலில் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படட வணக்கத்திற்குரிய மேயர் அவர்களும், மாமன்ற உறுப்பினர்களும் 1.4.2008 முதல் அமல்படுத்தப்பட்ட வரிவிதிப்பில் பல குளறுபடிகள் இருப்பதாகக் கருத்து தெரிவித்துள்ளனர். வரி விதிப்புக்கு உட்பட்ட குடியிருப்புகள் வகைப்படுத்தப்பட்ட முறை சரியில்லை எனவும் மாநகராட்சித் தெருக்கள் **ஏ, பி, சி, டி** என்ற வகைபாட்டுக்குள் கொண்டு வந்தது முறையாக இல்லை எனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. மேலும் பெரும் எண்ணிக்கையிலான கட்டுமானங்கள் வரிவிதிப்பிற்கு உட்படுத்தப்படாமல் வரி ஏய்ப்பு நடைபெறுவதாகவும் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது.

அதேபோன்று பாதாள சாக்கடை பராமரிப்புக் கட்டணம் வெவ்வேறு வரிகட்டும் கட்டுமானங்களுக்கு வேறுபாடு இன்றி ஒரே விகிதத்தில் வசூலிக்கப்படுகிறது என்றும் இதனால் ஏழை எளியோர் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குறைகளை விரைவில் களைய வேண்டும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே 2007–ஆம் ஆண்டே மதுரை மாநகராட்சி பகுதிகளில் Satellite Imagery –ஐப் பயன்படுத்தி மாநகரின் 72 வார்டுகளுக்கும் Base Map தயார் செய்து வீதி வாரியாக கணக்கெடுப்பு நடத்தி வரிவிதிப்பிற்கு வராத விடுபட்ட இனங்களை கண்டறிய அரசு உத்திரவு இட்டு Tata Consultancy Services நிறுவனம் மூலம் பணியை முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் கடந்த நான்காண்டுகளில் இப்பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் உள்ளது.

இப்பணியைப் பற்றிய நவம்பர் 18,19 தேதிகளில் ஆய்வு செய்த நகராட்சி நிர்வாக ஆணையர் இந்தப்பணியை அடுத்த ஆறுமாதத்திற்குள் முடிக்க உத்திரவிட்டுள்ளார்.

எனவே இந்த சந்தர்ப்பத்தை வாய்ப்பாக பயன்படுத்தி தீவிர கணக்கெடுப்பை மாநகராட்சியின் 100 வார்டுகளிலும் நடத்தி திட்டத்தை வெற்றிகரமாக்கலாம்.

இந்தக் குறைகளை களைய ஒரு தீவிர கணக்கெடுப்பு நடத்த வேண்டுவது அவசியம் ஆகும். இந்தக் கணக்கெடுப்பில் கட்டிட உரிமையாளர்களுக்கு சுயமதிப்பீட்டுப் படிவம் வழங்கி அவர்களிடம் நிரப்ப, படிவத்தைப் பெற்று அவற்றில் உள்ள விபரங்களின் அடிப்படையில் வரியை சீரமைக்கலாம்.

சுயமதிப்பீட்டுப் படிவங்களை வரி உதவியாளர் மூலம் வழங்கி நிரப்பி வாங்கலாம்.

விபரங்களை கணினி மூலம் வகைப்பாடு செய்து வரிவிதிப்பை சீரமைப்பதற்கும், சீரமைக்கப்பட்ட வரிவிதிப்பை 1.4.2012 முதல் அமல்படுத்துவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.73**

**மதுரை மாநகராட்சி 100–வார்டுகளாக விரிவுபடுத்தப்பட்டுள்ளதால், வரியை சீராய்வு செய்ய குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 16) கி.ம.நி.3/ 14430/2011

மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலத்தில் தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் கழகத்தைச் சார்ந்த (Texco – Chennai, A Government of TamilNadu Undertaking) பணியாளர்கள் (8051) காவலர்கள் 3 நபர்கள் மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.3–ல் பணிபுரிந்து வருகின்றார்கள்.

அரசாணை எண்.511, நாள்: 10.06.2010–ன்படி மேற்படி மூன்று காவலர்களுக்கு அகவிலைப்படியின் பேரில் கீழ்கண்டவாறு 01.01.2010 முதல் 31.03.2010 முடிய மற்றும் 01.04.2010 முதல் ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

| பதவி | தற்போது வழங்கப்பட்ட ஊதியம் | 01.01.2010 முதல் வழங்க வேண்டிய ஊதியம் | 01.04.2010 முதல் வழங்க வேண்டிய ஊதியம் |
|---|---|---|---|
| பாதுகாவலர் 3 நபர்கள் | 5582 | 6597 | 7191 |

மேற்கண்ட ஊதியத்திற்கு சேவைக்கட்டணம் 12% (Service Charge) சேவை வரி (Service Tax) 10% கல்வி வரி 2% (Education Tax) உயர்நிலை கல்வி வரி (Secondary Education Tax) 1% வழங்க வேண்டியுள்ளது.

எனவே, மேற்படி 3 காவலர்களுக்கும் மேலே குறிப்பிட்டுள்ள விபரப்படி ஊதியம் மற்றும் நிலுவைத் தொகையினை வழங்குவது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.74**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 17) ந.பொ. 1/ 19479 / 08

மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பாதாள சாக்கடை பணிகள் நிறைவேற்றப்பட்ட போது பழுதடைந்த சாலைகளிலும், இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்தின் கீழ் குழாய்கள் அமைக்கப்பட்ட சாலைகளையும் மற்றும் வெள்ள சேதத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகளையும் முதற்கட்டமாக மராமத்துப் பணிகளை மேற்கொள்ள ”சிறப்பு சாலைத் திட்டம் 2010-11” க்கான திட்டத்தில் 114.00 கி.மீ. நீளச் சாலைகளை மராமத்து செய்ய ரூ. 33.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் கடந்த ஜனவரி மாதம் பெய்த கனமழையின் போது சேதமடைந்த சாலைகளை சரி செய்வதற்கு ”இயற்கை இடர்பாடுகளை நிரந்தரமாக சீரமைக்கும் திட்டம் 2011” நிதியின் கீழ் 18.169 கி.மீ. நீளச் சாலைகளை ரூ. 9.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு நிறைவடையும் நிலையில் உள்ளது.

சிறப்புச் சாலைத் திட்டத்தில் சேர்க்கப்படாத சாலைகளையும் (குடிநீர் குழாய் மற்றும் பாதாள சாக்கடை அமைக்கப்பட்ட சாலைகள்) தற்போது ஏற்பட்ட வடகிழக்கு பருவமழையின் காரணத்தினால் சேதமடைந்து போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ள சாலைகளையும் சீரமைக்க வேண்டி மதிப்பீடுகள் 203.60 கி.மீ. நீளத்திற்கு ரூ. 83.14 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் 2011ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி ஏற்கனவே கடிதம் மற்றும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி திட்டங்களில் சேர்க்கப்படாமல் விடுபட்டுள்ள கீழ்க்கண்ட முக்கிய சாலைகள் ஆய்வு செய்யப்பட்டு அட்டவணைப்படுத்தப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண். | வார்டு எண் | தலைப்பு | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | 46 | தார் சாலை | ம.பொ. 4/ ம.எண். 206/11-12<br>லூர்து நகர் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் | 13.70 |
| 2 | 44 | தார் சாலை | ம.பொ. 4/ ம.எண். 248/11-12<br>பழைய LIG காலனி பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் | 10.75 |
| 3 | 44 | தார் சாலை | ம.பொ. 4/ ம.எண். 249/11-12<br>கே.கே. நகர் 5வது தெரு (பகுதி) மற்றும் பழைய LIG காலனி 8வது தெரு பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் | 15.50 |
| 4 | 44 | தார் சாலை | ம.பொ. 4/ ம.எண். 250/11-12<br>காமராஜர் கிழக்கு மேற்கு, வடக்கு மேற்கு மற்றும் மானகிரி 3வது தெரு பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் | 13.50 |
| 5 | 35 | தார் சாலை | ம.பொ. 4/ ம.எண். 252/11-12<br>மதிச்சியம் கிழக்கு தெரு மற்றும் வைகை வடகரைப் பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் | 14.40 |
| 6 | 47 | தார் சாலை | ம.பொ. 4/ ம.எண். 256/11-12<br>காலன்கரை வடக்கு, தெற்கு தெரு மற்றும் பட்டிமேடு தெரு பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் | 11.25 |
| 7 | 47 | தார் சாலை | ம.பொ. 4/ ம.எண். 255/11-12<br>டி.ஆர்.ஓ. காலனி மெயின் மற்றும் குறுக்குத் தெரு பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் | 13.25 |
| 8 | 37 | தார் சாலை | ம.பொ. 4/ ம.எண். 258/11-12<br>காளியம்மன் கோவில் தெரு, வெண்மணி தெரு மற்றம் முதலியார் 1வது முதல் 3வது தெருப் பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் | 10.00 |
| 9 | 64 | பேவர் பிளாக் சாலை | ம.பொ. 5/ ம.எண். 227/11-12<br>முனியாண்டி கோவில் தெரு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 3.50 |
| 10 | 64 | பேவர் பிளாக் சாலை | ம.பொ. 5/ ம.எண். 219/11-12<br>நடுத் தெரு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 7.00 |
| 11 | 64 | பேவர் பிளாக் சாலை | ம.பொ. 5/ ம.எண். 246/11-12<br>முனியாண்டி கோவில் தெருப் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1.60 |
| 12 | 64 | பேவர் பிளாக் சாலை | ம.பொ. 5/ ம.எண். 233/11-12<br>மாதா கோவில் தெருப் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 2.00 |
| 13 | 64 | பேவர் பிளாக் சாலை | ம.பொ. 5/ ம.எண். 221/11-12<br>மகாளிப்பட்டி சாலை பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 2.25 |
| 14 | 64 | பேவர் பிளாக் சாலை | ம.பொ. 5/ ம.எண். 232/11-12<br>கீரைத்துரை நாடார் 3வது தெருப் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 7.10 |
| 15 | 64 | பேவர் பிளாக் சாலை | ம.பொ. 5/ ம.எண். 218/11-12<br>வேதப்பிள்ளை தெருப் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 3.50 |

| வ. எண். | வார்டு எண் | தலைப்பு | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 16 | 64 | தார் சாலை | ம.பொ. 5/ ம.எண். 247/11-12<br>புது நல்லமுத்துப் பிள்ளை சாலையில் (கிழக்கு பகுதி) தார் சாலை புதுப்பித்தல் | 6.60 |
| 17 | 76 | தார் சாலை | ம.பொ. 7/ ம.எண். 169/11-12<br>பாலாஜி தெரு மற்றும் குறுக்குத் தெரு பகுதிகளில் மெட்டல் சாலை அமைத்தல் | 18.00 |
| 18 | 76 | தார் சாலை | ம.பொ. 7/ ம.எண். 168/11-12<br>பாண்டியன் நகர் மற்றும் குறுக்குத் தெரு பகுதிகளில் தார் சாலை அதைத்தல் | 19.50 |
| 19 | 76 | தார் சாலை | ம.பொ. 7/ ம.எண். 183/11-12<br>சாஸ்தா தெரு, திருமகள் தெரு மற்றும் இதர தெரு பகுதிகளில் தார் சாலை அதைத்தல் | 24.95 |
| 20 | 76 | தார் சாலை | ம.பொ. 7/ ம.எண். 167/11-12<br>திருவள்ளூவர் மெயின் தெருப் பகுதியில் தார் சாலை அதைத்தல் | 28.50 |
| 21 | 20 | தார் சாலை | ம.பொ. 7/ ம.எண். 264/11-12<br>சம்மட்டிபுரம் மெயின் சாலை, முத்துராமலிங்கத் தேவர் தெரு, அருணாச்சலம் தெரு, பாலு தெரு மற்றும் வடக்கு வாசல் பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் | 27.60 |
| 22 | 20 | சிமெண்ட் கான்கிரீட் சாலை | ம.பொ. 7/ ம.எண். 265/11-12<br>விஜயசேகரன் தெரு, ராஜா குறுக்குத் தெரு, வளர்மதி தெரு மற்றும் பாண்டியன் நகர் பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலை புதுப்பித்தல் | 12.70 |
| 23 | 80 | தார் சாலை | ம.பொ. 7/ ம.எண். 203/11-12<br>வடக்கு பெருமாள் மேஸ்திரி வீதி பகுதியில் தார் சாலை புதுப்பித்தல் | 13.20 |
| 24 | 80 | தார் சாலை | ம.பொ. 7/ ம.எண். 245/11-12<br>மேற்கு பெருமாள் மேஸ்திரி வீதி பகுதியில் தார் சாலை புதுப்பித்தல் | 14.00 |
| 25 | 93 | தார் சாலை | ம.பொ. 7/ ம.எண். 197/11-12<br>பாரதியார் மெயின் தெரு மற்றும் பாலரெங்காபுரம் குறுக்குத் தெருப் பகுதிகளில் மெட்டல் சாலை அமைத்தல் | 9.98 |
| 26 | 93 | தார் சாலை | ம.பொ. 7/ ம.எண். 196/11-12<br>அழகுசுந்தரம் நகர் தெரு மற்றும் RMS காலனி 1வது மற்றும் 2வது தெருப் பகுதிகளில் மெட்டல் சாலை அமைத்தல் | 9.80 |
| 27 | 93 | தார் சாலை | ம.பொ. 7/ ம.எண். 195/11-12<br>காந்திஜி தெரு, சுசீலா ரெங்கநாதன் மெயின் மற்றும் குறுக்குத் தெருப் பகுதிகளில் மெட்டல் சாலை அமைத்தல் | 12.30 |
| 28 | 93 | தார் சாலை | ம.பொ. 7/ ம.எண். 157/11-12<br>கென்னட் தெரு பகுதியில் மெட்டல் சாலை அமைத்தல் | 15.00 |
| 29 | 93 | தார் சாலை | ம.பொ. 7/ ம.எண். 156/11-12<br>பாண்டியன் மெயின் மற்றும் குறுக்குத் தெரு பகுதிகளில் மெட்டல் சாலை அமைத்தல் | 14.00 |
| 30 | 90 | தார் சாலை | ம.பொ. 7/ ம.எண். 445/11-12<br>நேதாஜி சாலை மற்றும் மார்கர் காலனியில் தார் சாலை அமைத்தல் | 12.70 |

| வ. எண். | வார்டு எண் | தலைப்பு | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 31 | 90 | தார் சாலை | ம.பொ. 7/ ம.எண். 446/11-12 நேரு தெரு, அண்ணா முக்கிய தெரு மற்றும் நேதாஜி 7வது குறுக்குத் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 12.95 |
| 32 | 90 | சிமெண்ட் கான்கிரீட் சாலை | ம.பொ. 7/ ம.எண். 447/11-12 முருகன் கோவில் தெரு, சாஸ்திரி 1வது 2வது தெரு, சாஸ்திரி குறுக்குத் தெரு, மாதா கோவில் தெரு, இராஜீவ் காந்தி தெரு, எம்.ஜீ.ஆர் தெரு, நேதாஜி 1வது தெரு. அண்ணா 2வது முதல் 5வது குறுக்குத் தெருக்களில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 14.40 |
| 33 | 90 | சிமெண்ட் கான்கிரீட் சாலை | ம.பொ. 7/ ம.எண். 448/11-12 வீரகாளியம்மன் கோவில் தெரு பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 9.70 |

மேற்படி பழுதடைந்த சாலைகளை சீரமைத்திட வேண்டி மதுரை மாநகராட்சியின் வருவாய் நிதி ஆதாரம் போதிய அளவு இல்லாத காரணத்தினால் இச்சாலைகளை சீரமைக்க தேவைப்படும் நிதியினை நகர்ப்புர சாலை உட்கட்டமைப்பு நவீன திட்டம் 2011 ன் கீழ் ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ரூ. 350.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் ஒப்புதல் பெறப்பட்டு மேற்படி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.75**

**மதுரை மாநகராட்சி பகுதிகளில் பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு சாலைகளை சீரமைத்திட குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 18) Jn. S. 5/33640/09

மதுரை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இரண்டாவது வைகை குடிநீர் திட்டம், வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், சாலையோரங்களில் மழைநீர் வடிகால் மற்றும் பெரிய வாய்க்கால்களில் கான்கீரிட் சுவரும் தளமும் அமைக்கவும், விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்கவும், ஏற்கனவே உள்ள பழைய பாதாள சாக்கடைகளை புதுப்பிக்கவும், புதிதாக நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கு மத்திய அரசின் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் “ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு (CS&MC)” கீழ்கண்ட திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டத்தின் விபரம் மற்றும் மத்திய மாநில அரசுகளின் பங்களிப்பு தொகை, டெண்டர் மூலம் பெறப்பட்ட விலை விகிதம், மதுரை மாநகராட்சி பங்களிப்பு தொகை ஆகியவற்றின் விபரம்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு எண் மற்றும் தேதி | ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு அனுமதித்த மொத்த தொகை | மத்திய அரசு பங்கு தொகை 50% | மாநில அரசு பங்கு தொகை 20% | ஒப்பந்த ப்புள்ளி மதிப்பு | மதுரை மாநகராட்சியின் பங்கு தொகை 30% தரவிலைப் பட்டியல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் கூடுதல் தொகை. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மழைநீர் வடிகால் திட்டம் | 29th 20.04.07 | 251.81 | 125.91 | 50.36 | 348.31 | 172.04 |
| 2 | பாதாள சாக்கடை திட்டம் | 32nd 20.07.07 | 229.34 | 114.67 | 45.87 | 249.20 | 88.66 |
| 3 | வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல் திட்டம் | 24th 22.02.07 | 4.77 | 2.39 | 0.95 | 9.40 | 2.77 |
| 4 | இராண்டாம் | 6th 14.07.06 | 59.32 | 29.66 | 11.86 | 71.23 | 29.71 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வைகை குடிநீர் திட்டம் | | | | | | |
| 5 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | 21st 20.02.07 | 74.29 | 37.14 | 14.86 | 75.99 | 23.99{5.25+17.04 (PPP mode) |
| **Total** | | | **619.53** | **309.77** | **123.90** | **754.13** | **300.13** |

மேற்படி திட்டங்களுக்கு மதுரை மாநகராட்சியின் பங்கு தொகை ரூ. 300.13 (185.86+131.31-17.04). விலையேற்றத்தால் (Escalation of Cost) ஏற்றத்தால் ஏற்பட்ட கூடுதல் தொகையையும் டெண்டரின் போது கூடுதல் விலைப் புள்ளிகள் பெறப்பட்ட காரணத்தினாலும் ஏற்பட்ட கூடுதல் தொகையையும் சேர்த்து ரூ. 300.13 கோடியை கீழ்கண்டவாறு பெற்று மேற்படி திட்டங்களை செய்து முடிக்கலாம்.

**(ரூ. கோடியில்)**

| | | |
|---|---|---|
| 1. | மேற்கண்ட திட்டங்களுக்கு பெறவேண்டிய நான்காவது தவணைத்தொகை | 98.00 |
| 2. | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு கழகத்திடம் (HUDCO) நிபந்தனைகளுக்குட்பட்டு பெறப்பட வேண்டிய கடன் தொகை | 100.00 |
| 3. | மாநில அரசிடம் மானியமாக பெறவேண்டிய தொகை | 102.13 |
| | **மொத்தம்** | **300.13** |

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்படி திட்டப்பணிகளுக்கு வழங்கப்படும் மானியத் தொகை நான்கு தவணையாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நான்காவது தவணைத் தொகை ரூ. 98.00 கோடி பெற வேண்டியுள்ளது. பற்றாக்குறையாக உள்ள ரூ.300.13 கோடியில் ரூ.98 கோடி போக மீதமுள்ள ரூ.202.13 கோடி–ஐ HUDCO நிறுவனத்தின் மூலம் கடனாக பெற மேற்படி நிறுவனத்திடமிருந்து கருத்து பெறப்பட்டதில் மதுரை மாநகராட்சியின் வருவாயை அடிப்படையாக கொண்டு கடன் தொகையை திரும்ப செலுத்தும் திறன் மிகவும் குறைவாக உள்ளதால் ரூ.100 கோடிக்கு மட்டும் கடன் பெற கருத்துரு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள். ஆகவே இத்திட்டத்திற்கு மேற்படி மத்திய அரசின் நான்காவது தவணைத் தொகையும், HUDCO நிறுவனத்தின் மூலம் பெறப்பட உள்ள தொகை நீங்கலாக மீதம் உள்ள தொகையான ரூ.102.13 கோடி–ஐ மாநில அரசிடமிருந்து மானியமாக பெற்று இத்திட்டத்தை நிறைவேற்ற உரிய அனுமதி வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எனவே HUDCO நிறுவனத்தின் மூலம் ரூ.100 கோடி–ஐ அந்நிறுவனத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடனாக பெற அரசின் அனுமதியினை பெறுவதற்கும் அரசின் மானியமாக ரூ.102.13 கோடி பெறுவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.76**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**19) Jn. S.1/ 36136 /11**

மதுரை மாநகராட்சியால் அமைக்கப்பட்ட 27.20 கி.மீ. சுற்றுச்சாலை மதுரை –திருச்சி சாலையில் (NH 45-B) 445/10 கி.மீ. ஆரம்பித்து மதுரை – கன்னியாகுமரி சாலையில் (NH 7) 12/6 கி.மீ. இணைகின்றது. இச்சுற்றுச்சாலை மதுரை – தொண்டி சாலையையும், மதுரை – இராமநாதபுரம் சாலையையும், மதுரை – நெடுங்குளம் சாலையையும், மதுரை – தூத்துகுடி சாலையையும் இணைக்கின்றது. இச்சுற்றுச்சாலை அமைக்கப்பட்டதன் காரணத்தினால் மதுரை மாநகரின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் உள்ள மாவட்டங்களுக்கு செல்லக் கூடிய வாகனங்கள் மதுரை மாநகரின் மையப் பகுதிக்கு வருவது தவிர்க்கப்பட்டு, போக்குவரத்து நெரிசல்கள் வெகுவாக குறைக்கப்பட்டது.

மேற்படி சுற்றுச்சாலையை போலவே, மதுரை – திருச்சி சாலையில் (NH 45-B) 445/10 கி.மீட்டரிலிருந்து கிழக்காக பெங்களூர் – சேலம் – மதுரை சாலையில் (NH 7) 426/6 கி.மீ சந்திப்பில் சோழவந்தான் அருகில் நான்கு வழிச் சாலையை இணைக்கும் சுற்றுச்சாலை அமைப்பதன் மூலம் திருச்சியில் இருந்து மதுரையின் மேற்கு பகுதியில் உள்ள மாவட்டங்களுக்கு செல்லும் வாகனங்கள் மதுரை மாநகரின் மையப் பகுதிகளுக்கு வந்து செல்வதை பெருமளவு குறைக்க இயலும் என்பதால் இச்சுற்றுச்சாலையினை அமைப்பதற்கு மாநில அரசிடமிருந்து மானியமாகவோ அல்லது உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனங்கள் / வங்கிகள் / அரசு கடன் பத்திரம் மூலம் கடனாகவோ பெற்று 17 கி.மீ. நீளமுள்ள இச்சுற்றுச் சாலையினை ரூ. 120.00 கோடி மதிப்பீட்டில் அமைத்து இக்கடன் தொகையினை சுற்றுச்சாலை சுங்கவரி மூலம் திரும்ப செலுத்துவதற்கும் அரசின் ஒப்புதலைப் பெறுவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.77**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**20) Jn. S.1/ 36137/11**

மதுரை மாநகராட்சியால் அமைக்கப்பட்ட **27.20** கி.மீ. சுற்றுச்சாலை மதுரை – திருச்சி சாலையில் (NH 45-B) 445/10 கி.மீ. ஆரம்பித்து மதுரை – கன்னியாகுமரி சாலையில் (NH 7) 12/6 கி.மீ. இணைகின்றது. இச்சுற்றுச்சாலை மதுரை – தொண்டி சாலையையும், மதுரை – இராமநாதபுரம் சாலையையும், மதுரை – நெடுங்குளம் சாலையையும், மதுரை – தூத்துகுடி சாலையையும் இணைக்கின்றது. இச்சுற்றுச்சாலை அமைக்கப்பட்டதன் காரணத்தினால் மதுரை மாநகரின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் உள்ள மாவட்டங்களுக்கு செல்லக் கூடிய வாகனங்கள் மதுரை மாநகரின் மையப் பகுதிக்கு வருவது தவிர்க்கப்பட்டு, போக்குவரத்து நெரிசல்கள் வெகுவாக குறைக்கப்பட்டது.

இச்சுற்றுச்சாலை **1996–97**ம் நிதியாண்டில் பணிகள் துவக்கப்பட்டு **2000–01**ம் நிதியாண்டில் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. தற்போது உள்ள வாகனப் போக்குவரத்தின் எண்ணிக்கைக்கேற்ப இச்சுற்றுச்சாலை நான்கு வழிச் சுற்றுச்சாலையாக மாற்ற வேண்டிய நிலை உள்ளது. மேலும் விமான நிலைய விரிவாக்கத்தின் காரணமாக இச்சுற்றுச்சாலையின் 14/6 கி.மீ. துாரத்திலிருந்து மாற்றுப்பாதை 6.40 கி.மீ. அமைப்பதற்கு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மீதமுள்ள சாலையினை (0.00 முதல் 14.60 கி.மீ வரை மற்றும் 17.80 கி.மீ. முதல் 27.20 கி.மீ. வரை) நான்கு வழிச் சாலையாக அமைப்பதற்கு மாநில அரசிடமிருந்து மானியமாகவோ அல்லது உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனங்கள் / வங்கிகள் / அரசு கடன் பத்திரம் மூலம் கடனாகவோ பெற்று **24.20** கி.மீ. நீளத்திற்கு இச்சுற்றுச் சாலையினை ரூ. **121.00** கோடி மதிப்பீட்டில் நான்கு வழிச்சாலையாக மாற்றியமைத்து இக்கடன் தொகையினை சுற்றுச்சாலை சுங்கவரி மூலம் திரும்ப செலுத்துவதற்கும் அரசின் ஒப்புதலைப் பெறுவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.78**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**21) ம.பொ.4/ம.எ.340/2011-12**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.2–ல் உள்ள வார்டுகள் **41**,**42** & **47**-க்குட்பட்ட ஹக்கீம் அஜ்மல்கான் சாலை, கோகலே சாலை, இரத்தினசாமி நாடார் மெயின் சாலை மற்றும் பாரதி உலா சாலை போன்ற சாலைகள் பழுது ஏற்பட்டு போக்குவரத்திற்கு சிரமம் ஏற்படுத்துவதாய் உள்ளது.

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையரகக் கடிதம் எண்.ந.க.எண்.29255/இ3/2011, நாள் : 01.08.2011-ன்படி, திடக்கழிவு மேலாண்மையின் மூலம் கிடைக்கப்பெறும் பழைய பிளாஸ்டிக் கழிவுகளை கலந்து மதுரை மாநகராட்சியில் மூன்று கிலோ மீட்டர் நீளத்திற்கு பிளாஸ்டிக் தார்சாலை அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வுத்திரவின் அடிப்படையில் மேற்கண்ட நான்கு சாலைகளை சிறப்பு மராமத்து செய்திட விரிவான திட்ட அறிக்கை ரூ.1,55,00,000/-(ஒரு கோடியே ஐம்பத்தி லட்சம்)-க்கு தயார் செய்யப்பட்டு, நிதியுதவி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.79**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**22) சி.டபிள்யு.3/ 34162/ 2006**

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை வ.உ.மேயர் அவர்களின் பாதுகாப்பு பணிக்காக சேவைக் கட்டண அடிப்படையில் பணியாற்றும் திரு.U.V.மீனாட்சி சுந்தரம் டெக்ஸ்கோ பணியாளரை **01.10.2011** முதல் **30.09.2012** வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.80**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**

**மதுரை** **மேயர்**

**நாள் : 25.11.2011** **மதுரை மாநகராட்சி**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2011-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் நாள் புதன்கிழமை காலை 12.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) ம.பொ.5/36325 /11**

தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு வசதிகளுக்கான நிதிச் சேவைகள் நிறுவனம், சென்னை (Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited, Chennai) விரிவுபடுத்தப்பட்ட மதுரை மாநகராட்சிக்கு மாநகர் வளர்ச்சித் திட்டம் தயாரிப்புப் பணி மேற்கொள்ள, GFII/ TNUIFSL/City Development Plan for Expanded Corporation/2011, நாள். 24.11.2011 கடிதத்தின் வாயிலாக மதுரை மாநகராட்சி மாமன்றத்தின் இசைவு கோரியுள்ளது.

இந்தத் தயாரிப்புப் பணி மேற்படி நிறுவனம் கையாளும் Grant Fund II மூலம் மேற்கொள்ளப்படும் உலக வங்கி வழிகாட்டுதலின் படி இந்தப் பணி நடைபெறும். இந்தப் பணி மேற்கொள்ளப்படுவதன் மூலம் மதுரை மாநகராட்சி வரும் ஆண்டுகளில் மாநகர் வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொள்ள பெரும் உதவியாக இருக்கும்.

எனவே இந்த திட்ட அறிக்கை தயரிக்கும் பணியினை மேற்படி தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு வசதிகளுக்கான நிதிச் சேவைகள் நிறுவனத்தின் ஆதரவில் நிறைவேற்ற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.81**

**விரிவுபடுத்தப்பட்ட மதுரை மாநகராட்சிக்கு மாநகர் வளர்ச்சி திட்டத்தின் தீட்ட அறிக்கை தயாரிக்கும் பணியினை தமிழ்நாடு நகர்புற கட்டமைப்பு வசதிகளுக்கான நிதிசேவைகள் நிறுவனத்தின் ஆதரவீல் நிறைவேற்ற மாமன்றம் தீர்மானிக்கின்றது.**

**2) ம.பொ. 5/ 36326 /11**

தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு வசதிகளுக்கான நிதிச் சேவைகள் நிறுவனம், சென்னை (Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited, Chennai) விரிவுபடுத்தப்பட்ட மதுரை மாநகராட்சிக்கு, புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் பணிகளைச் செய்ய விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணியினை மேற்கொள்ள GF II/ TNUIFSL/New Projcets – SWD 5 – Corporation Expanded Area/2011, நாள். 24.11.2011 கடிதத்தின் வாயிலாக மதுரை மாநகராட்சி மாமன்றத்தின் இசைவு கோரியுள்ளது.

இந்த விரிவான திட்ட மதிப்பீடு (Detailed Project Report) மதுரை மாநகராட்சியின் விரிவுபடுத்தப்பட்ட பகுதியில் மழைநீர் வடிகால் பணிகளுக்கு வழிகாட்டுதலாகவும் உதவியாகவும் இருக்கும். இந்த திட்ட மதிப்பீட்டின் மூலம் வரும் ஆண்டு மழைக்காலங்களில் மழைநீர் எளிதில் வழிந்தோடும் வகையில் மாநகர் முழுவதும் மழைநீர் வடிகால் அமைக்க இயலும்.

எனவே இந்த விரிவான திட்ட மதிப்பீட்டைத் தயாரிக்க மேற்படி தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு வசதிகளுக்கான நிதிச் சேவைகள் நிறுவனத்திற்கு இசைவு தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.82**

**விரிவுபடுத்தப்பட்ட மதுரை மாநகராட்சிக்கு புதிதாக இணைக்கப்டட பகுதிளில் மழைநீர் வடிகால் பகுதிகளை செய்தற்கு விரிவான திட்ட மதிப்பீட்டை தயாரிக்க தமிழ்நாடு நகர்புற கட்டமைப்பு வசதிகளுக்கான நிதிசேவைகள் நிறுவனத்திற்கு இசைவு தெரிவிக்க மாமன்றம் தீர்மானிக்கின்றது**

**3)** <u>ம.பொ. 7/**16294**/ 09</u>

மதுரை மாநகராட்சி மண்டல எண்.4-க்கான அலுவலகம் மதுரை மேல மாராட்வீதியில் இயங்கி வருகிறது. ஏற்கனவே தெற்கு மண்டலமாக இயங்கி வந்த காலத்தில் 19 வார்டுகள் இந்த மண்டலத்தில் இருந்து வந்தன. தற்போது மதுரை மாநகராட்சி எல்கை விரிவாக்கத்திற்குப் பின் 26 வார்டுகள் உள்ள மண்டலமாக இயங்கி வருகிறது. மண்டலத்தின் பரப்பளவு சுமார் 36.685 சதுர கி.மீ.ஆகும்.

மண்டலம் எண்-4 அலுவலகத்தில் தரைதளத்தில் சுமார் 2000.சஅடி பரப்பளவில் மதுரை பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் இயங்க ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கு ம.பொ.7/16294/09 ஏட்டில் மாமன்ற தீர்மானம் எண் : 758, நாள் :24.09.09-இன்படி வாடகையின்றி அலுவலகம் செயல்பட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் 2009-அக்டோபர் முதல் பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் இருந்து வருகிறது. மேலும் இம்மண்டலத்துடன் அவனியாபுரம் பகுதியிலிருந்து 94–வது வார்டும், திருப்பரங்குன்றம், திருநகர், ஹார்விபட்டி மற்றும் புதுக்குளம் பிட் II தியாகராஜர் காலனி ஆகிய பகுதிகளில் உள்ள 95 முதல் 99 வரையிலான 5 வார்டுகளும், மேற்கு மண்டலத்திலிருந்து 75,76,100 ஆகிய மூன்று வார்டுகளும் இணைக்கப்பட்டுள்ளன. ஒரு நகராட்சி, இரண்டு பேரூராட்சிகள் மற்றும் இரண்டு கிராம ஊராட்சிகளில் பணியாற்றிய அலுவலர்கள் வேலை செய்வதற்கு போதிய இடவசதி மண்டல அலுவலகத்தில் இல்லை. மேலும் இந்த உள்ளாட்சிகளிலிருந்து பெறப்பட்ட ஆவணங்களை வைப்பதற்கும் இடம் தேவைப்படுகிறது.

மதுரை பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் 2009 அக்டோபர் மாதம் முதல் செயல்படவில்லை. எனவே, மாநகராட்சி விரிவாக்கத்திற்கு பின் மண்டல அலுவலகம் 4, போதிய இடவசதியின்றி செயல்பட்டு வருவதால் பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் இயங்கி வந்த **2000** சதுர அடி கட்டிடத்தை மண்டல அலுவலகம் 4–க்கு திரும்ப எடுத்துக் கொள்வது அவசியமாவதால் கடந்த 24.09.2009 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண்.**758**–ஐ ரத்து செய்யக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்.83**</u>

<u>**மதுரை மாநகராட்சி விரிவாக்கத்திற்கு பின் மண்டலம் எண்.4 போதிய இடவசதி இன்றி செயல்பட்டு வருவதால், பாரளுமன்ற உறுப்பினர் அலுவலகம் இயங்கி வந்த 2000 சதுர கட்டிடத்தை மண்டலம் எண்.4–க்கு திரும்ப எடுத்துக் கொள்வது என அவசியமாவதால் கடந்த 24.09.2009–அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண்.758–யை ரத்து செய்ய மாமன்றம் தீர்மானிக்கின்றது.**</u>

**(ஒம்..) வி.வி.ராஜன்செல்லப்பா**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் : 29.11.2011**
**மதுரை.**

* * * * * * * *